# சஃப்தர் ஹஷ்மி

தன் வாழ்நாளில் முற்போக்குச் சிந்தனைகள் பரவுவதற்காக கலைவடிவங்கள் வாயிலாக உழைத்த இளைஞர் சஃப்தர் ஹஷ்மி, தன் சாவிலும் அந்தப் பணியைத் தொடர்ந்து செய்துவிட்டார். அவரது வாழ்க்கை எப்படி எழுச்சியோடு இருந்ததோ அதே போல அவரது மரணமும் இந்தியா முழுவதும் உள்ள முற்போக்குக் கலைஞர்களிடையே எழுச்சியை புதிய உத்வேகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

1954ல் ஏப்ரல் 12 ந் தேதியன்று பிறந்த சஃப்தர் ஹஷ்மி சிறுவயதிலிருந்தே முற்போக்கான சிந்தனைச் சூழலில் வளர்ந்தார். கல்லூரி நாட்களில் மாணவர் இயக்கத்தில் தீவிரமாகச் செயல் பட்டார். பிறகு இந்திய மக்கள் நாடக மன்றம் எனப்படும் இப்டாவில் பணியாற்றினார். 1975-76 ல் அவசர நிலையை இப்டா ஆதரித்தபோது ஹஷ்மியும் தயக்கத்தோடே ஆதரித்தார். ஆனால் இதுபற்றிய நெருடல் ஹஷ்மியிடம் வலுத்தது. இப்டாவிலிருந்து விலகினார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளராக தனியே ஜனநாட்டிய மஞ்ச் எனும் மக்கள் நாடக மன்றத்தைத் தொடங்கினார். ஏராளமான சிறு நாடகங்களை இக்குழுவினர் தெருக்களில், தொழிற்சாலை வாயில்களில் நடத்தி வந்தனர்.

இந்த ஆண்டு ஜனவரியில் உத்தரப் பிரதேச மாநிலத்தில் நகராட்சித் தேர்தல்கள் நடைபெற்றபோது, டெல்லியை அடுத்துள்ள தொழிற்பேட்டைப் பகுதிகளில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சிக்கு ஆதரவாக ஹஷ்மியும் ஜன நாட்டிய மஞ்சும் தெரு நாடகப் பிரச்சாரம் செய்தனர். இப்பகுதியில் ஏற்னெவே நடைபெற்றிருந்த தொழிலாளர் போராட்டப் பின்னணியில் ஹஷ்மி எழுதிய "உரக்கப் பேசு' என்ற தெரு நாடகத்தை அவரும் குழுவினரும் ஜனவரி முதல் தேதியன்று மாலை நிகழ்த்திக் கொண்டிருந்தபோது, காங்கிரஸ் கட்சியின் குண்டர்கள் நிகழ்ச்சியை சீர்குலைத்து வன் முறையில் ஈடுபட்டனர். ஹஷ்மியும் , சி. ஐ. டி. யூ. தொழிற்சங்க உறுப்பினர் பகதூர் என்பவரும் இந்தத் தாக்குதலில் பலத்த காயத்துக்குள்ளாகி, இறந்தார்கள்.

ஹஷ்மியின் மரணம் டெல்லியில் உள்ள கலைஞர்கள், எழுத்தாளர்களை ஆவேசப்படுத்தியது. உள் துறை அமைச்சர் பூட்டா சிங்கின் வீட்டுமுன்பு மறியல் நடத்தினர். திரைப்படக் கலைஞர் ஷபனா ஆஸ்மி தலைநகரில் நடந்த அனைத்துலகத் திரைவிழா மேடையில் திடீரென ஹஷ்மி படுகொலையைக் கண்டித்துப் பேசி அரசாங்கத்துக்கு கலக்கம் ஏற்படுத்தினார். ஜனவரி 9 அன்று நாடு முழுவதும் பல நாடகக் குழுக்களும் அரசியல் அமைப்புகளும் கண்டனக் கூட்டங்கள் நடத்தின. அத்தோடு நிற்கவில்லை. ஹஷ்மியின் பிறந்த தினமான ஏப்ரல் 12 ஐ நாடெங்கும் தெரு நாடக நாளாக நிகழ்த்தவும் தொடர்ந்து ஒரு வார காலம் பல்வேறு, கலாச்சார நிகழ்ச்சிகளை நடத்தவும் முடிவாயிற்று.

தமிழ்நாட்டில் இத்தகைய நிகழ்ச்சிகளை முற்போக்கு எழுத்தாளர் சங்கமும், பரீக்ஷா நாடகக்குழுவும் நடத்தின. டெல்லியில் ஹஷ்மியின் பெயரால் ஒரு டிரஸ்ட் ஏற்படுத்தப்பட்டு அதன் வாயிலாகத் தொடர்ந்து தெருநாடக இயக்கத்தை வலுப்படுத்தவும், முற்போக்குச்

சிந்தனைகளை கலைவடிவங்கள் வாயிலாகப் பரப்பவும் நோக்கங்கள் கொண்டிருப்பதாக அறிவிக்கப் பட்டிருக்கிறது.

இந்திய வரலாற்றில் இதற்கு முன்பும் பல கலைஞர்களின் கருத்துச் சுதந்திரம் பறிக்கப்பட்டிருக்கிறது. நூல்கள் தடை செய்யப்பட்டன. நாடகங்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. எழுத்தாளர்கள் சிறையிலடைக்கப்பட்டார்கள். அந்த வரிசையில் ஹஷ்மியின் உயிரே பறிக்கப்பட்டிருக்கிறது.

ஹஷ்மியின் மரணம் நாடு முழுவதும் பரவலாகத் தெரியவந்ததன் விளைவுகள் பல தரப்பட்டவை. டிசம்பர் 88 ல் வரைந்த தன் ஓவியத்தில் தேதியைத் திருத்தி ஹஷ்மி இறந்த ஜனவரி 2ந் தேதியைப் பொறித்து, ஹஷ்மிக்கு அஞ்சலி என்று ஓவியர் எம். எஃப். உசேன் அறிவித்ததும் அந்த ஓவியம் 10 லட்ச ரூபாய்க்கு ஏலத்தில் எடுக்கப்பட்டது ஒரு விதமான விளைவு!

வர்த்தகமயமாகிவிட்ட சமூகத்தில் ஹஷ்மி போன்ற மக்கள் கலைஞனின் மரணம் கூட வியாபாரமாக்கப்படும் ஆபத்தை இது உணர்த்துகிறது.

ஆயினும் பெருவாரியாக ஹஷ்மியின் மரணம் நாடெங்கும் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பால் கலைஞர்களை, எழுத்தாளர்களை ஒன்று சேர்த்துள்ளது. தங்கள் கருத்தை வெளிப்படுத்துவதற்குள்ள பிரமைக்கு குரல் கொடுக்க, ஒடுக்குமுறையை எதிர்க்க, எழுத்தாளர்கள் மத்தியில் ஒரு புத்துணர்வே ஏற்பட்டிருக்கிறது.

அதே போல தெருநாடகம் எனப்படும் திறந்தவெளி நாடகங்கள் பற்றியும் ஹஷ்மியின் மரணம் பரவலாக அறியவைத்திருக்கிறது. தமிழ் நாட்டில் 1978 லேயே சென்னை மெரினா கடற்கரையில் 'வீதி' நாடகக்குழு செயல்பட்டுவந்தது. அதற்கும் முன்பாகவே இந்தியாவின் பிற பகுதிகளில் தெரு நாடகங்கள் பரவலாக நிகழ்ந்து வந்தன. ஆனால் பத்தாண்டுகளுக்கும் மேலாக இயங்கி வந்த தெருநாடக இயக்கத்துக்கு ஹஷ்மியின் மரணம் புதிய கவனத்தைப் பெற்றுத் தந்திருக்கிறது.

ஹஷ்மியின் வாழ்க்கை, மரணம் இரண்டிலிருந்தும் நாம் உணரத்தக்க செய்திகள் பல உண்டு.

மேடை நாடகங்களே நாடகமாகக் கருதப்படுவதைக் கடுமையாக எதிர்த்தவர் ஹஷ்மி. தெருநாடகக்காரர்கள் தங்கள் கலை வடிவத்தைப் பற்றி ஒன்றும் குறைவாகக் கருதிக் கொள்ளத் தேவையில்லை என்றும் இந்தக் கலை வடிவம் வரலாற்றின் கட்டாயமாக விளைந்த வடிவம் என்பதை உணரவேண்டும் என்று ஓயாமல் அடித்துச் சொன்னார் ஹஷ்மி.

அதே சமயத்தில் மேடை நாடகமும் தெரு நாடகமும் ஒன்றுக்கொன்று எதிரானவை என்று கருதுவதை ஹஷ்மி ஏற்கவில்லை. மேடை நாடகத்தையும் பூர்ஷ்வாக்களிடமிருந்து விடுதலை செய்ய உழைக்க வேண்டும் - என்றே வலியுறுத்தினார். தமது குழுவினர் கலை வெளிப்பாட்டில் பல பரிமாணங்களிலும் தேர்ந்தவர்களாக இருக்கவேண்டும் என விரும்பிய

ஹஷ்மி மூத்த கலைஞரான ஹபீப் தன்வீரைக் கொண்டு தம் குழுவினரை மேடை நாடகம் ஒன்றில் ஈடுபடுத்திப் பயிற்சி பெற வைத்தார்.

எழுத்தாளனும் கலைஞனும் மனிதநேய நோக்கில் இயங்கும் போது பிற துறையினருடன் இணைந்து இயங்குவதை ஹஷ்மி வலியுறுத்தினார். தொழிற்சங்க இயக்கத்துக்கும் கலாச்சார இயக்கத்துக்கும் இடையே உறவுகள் இல்லாமல் இருப்பதே பெரும்பான்மை நிலையாக உள்ள வேளையில், ஹஷ்மி அதை மாற்றினார். ஆதனால்தான் மரணத்தைக் கூட கலைஞரான அவரும் தொழிற்சங்க உறுப்பினரான பகதூர் என்பவரும் ஒரே இடத்தில் சந்தித்திருக்கிறார்கள்.

ஹஷ்மியின் குடும்பச் சூழல் ஒவ்வொரு முற்போக்குக் கலைஞனும் அவாவக் கூடியது. தந்தை இளமையிலிருந்தே முற்போக்குச் சிந்தனையாளராக இருந்தவர். ஹஷ்மியின் தாய் , ஹஷ்மி இறந்த உடன், சி. ஐ. டி. யூ அலுவலகத்தில் ,வேறு ஆட்களற்ற நிலையில் தானே இருந்து, தொலைபேசி அழைப்புகளுக்கு பதில் கூறும் உறுதியான மனத்தோடு விளங்கியதை அவரை அறிந்தவரான மைதிலி சிவராமன் அண்மையில் ஒரு கூட்டத்தில் நினைவுகூர்ந்தார். அவர் அப்படி இருந்ததற்குக் காரணம் அவர் தன்னை ஹஷ்மியின் தாய் என்று கருதிக் கொண்டதால் அல்ல. மாறாகத் தன்னை ஒரு அரசியல் ஊழியராகக் கருதியது தான்.

ஹஷ்மியின் இறுதிச்சடங்கு, அவர் கொல்லப்பட்ட இடத்தில், நின்றுபோன நாடகத்தைத் தொடர்ந்து நடத்துவதாக அமைந்தது. அந்த நாடகத்தில் ஹஷ்மியின் மனைவி மாலா பங்கேற்றார்.

ஒரு முற்போக்காளனின் சமூக வாழ்க்கையும் தனிவாழ்க்கையும் எப்போதுமே பல தலைமுறைகளுக்கும் உத்வேகம் தருவதாகவே அமையவேண்டும். அதிலும் ஒரு லட்சியத்துக்காக உயிரையும் இழந்த ஹஷ்மியின் வாழ்க்கையும் அத்தகைய உத்வேகத்தை இன்னும் பல காலத்துக்கு வழங்கிக் கொண்டே இருக்கும்.

**சங்கமி**

**மே,89**